★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 65630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ... இராம நிருத்தஞ் செழியன

The "Nam Nadu" A Tamil Daily ✠ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 22உ வியாழன் (6—9—56) ★ ★ வெளியீடு: ஆவணி 23உ வெள்ளி (7—9—56) [இதழ் 75

பாகிஸ்தான் பிரதமர் இராஜிநாமா?

★

கராச்சி, செப். 5—

பாகிஸ்தான் பிரதமர் சௌத்திரி முகம்மது அலி தனது பதவியை இராஜிநாமாச் செய்துவிட்டதாக உருது தினசரியான 'அஞ்னம்' கூறுகிறது; ஆனல், இந்தச் செய்தி சர்க்காரால் உறுதி செய்யப்படவில்லையென செய்தி ஒன்று தரப்பட்டுள்ளது.

வெள்ளை வெறியர் மிருகச் செயல்!

நீக்ரோவர் குடியிருக்கும் பகுதியில் கொடிய குண்டுகளை வெடித்தனராம்

இராணுவப் பாதுகாப்பு இருந்தும் நீக்ரோ மாணவருக்குத் தொல்லை

அமெரிக்காவில் அநாகரீகமான சம்பவங்கள்

நீக்ரோவ மக்களை அடிமைகளாகவே நடத்தவேண்டும் என்ற நிறத் திமிரால் வெள்ளையர் கொண்டுள்ள எண்ணம் இன்னும் அமெரிக்காவில் நீடிப்பது, நாகரிகத்தின் உச்சாணியை அமெரிக்கா எட்டிக்கொண்டிருக்கிறது என்ற கூற்றைப் பொய்ப்பிப்பதாக உள்ளது.

சமீப காலத்தில், 'பள்ளிகளில் நிறவேற்றுமை காட்டக்கூடாது' என்ற தலைமை உயர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு எதிராக அமெரிக்காவின் சில பகுதிகளில் நடைபெற்றுவரும் சம்பவங்கள் மிக்க மனவேதனையைத் தந்துவருகின்றன.

நீக்ரோ மாணவர்கள், பள்ளிகளுக்கு இராணுவ உதவியுடன் தான் வந்துபோக முடிகிறது என்ற நிலை டென்னசி இராஜ்யத்தில் கிளிண்டன் என்ற நகரில் ஏற்பட்டிருப்பது, அமெரிக்கரில் ஒரு பகுதியினரிடை எழுந்துள்ள நிறவெறியின் கொடூரத் தன்மைக்கு சாட்சி பகருகிறது.

இதைவிடக் கொடுமையான சம்பவம் ஒன்றும் நிகழ்ந்திருக்கிறது, வேறொரு நகரில்!

நிறவெறிகொண்ட அமெரிக்க வெள்ளையரில் சிலர், சுமார் 1000 பேர் மட்டும் வசிக்கும் ஆலிவர் ஸ்பிரிங்ஸ் என்ற நகரில் நீக்ரோவர் வாழும் பகுதியில், கொடிய வெடி குண்டுகளை வெடித்திருக்கின்றனர்.

மேலும் நீக்ரோவரையும், அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவதில் ஈடுபட்டிருக்கும் போலீசாரையும் நிறவெறிகொண்ட வெள்ளையர்கள் கையில் கிடைக்கிற ஆயுதங்களைக் கொண்டு தாக்குகிறக் காட்டுமிராண்டித்தனமான வேலைகளில் ஈடுபட்டமைக்காகப் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

டென்னசி மாகாணத்தில் நீக்ரோவரே இருக்கக்கூடாது என்று கூறுகிறவகையில் வெள்ளையர் பலர், ஆர்ப்பாட்டங்களிலும் ஆபாசமான கூச்சல் எழுப்புவதிலும் ஈடுபட்டுத் தங்களின் மனிதாபிமானமற்ற அநாகரீக மனப்பான்மையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இராணுவப் பாதுகாப்புடன் பள்ளிக்குவரும் நீக்ரோவ மாணவர்களையும் கேலியும் கிண்டலும் செய்கின்றனராம், வெள்ளைநிற வெறியர்கள்.

வேதனையான நிகழ்ச்சிகள்!

போலீஸ் காலனியில் கள்ளச் சாராயக்கூடம்

கல்கத்தா, செப். 5—

இரயில்வே பாதுகாப்புப் போலீசாரின் குடியிருப்புக் காலனியில் கள்ளச்சாராயம் காய்ச்சும் கூடம் இருந்ததை போலீசார் கண்டுபிடித்திருக்கின்றனராம்.

இதையொட்டி 18 போலீசாரும் ஏழு பெண்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்குரிய பல சாமான்களும் கைப்பற்றப்பட்டனவாம்.

அரிசி விலையைக் குறைக்க!

மத்திய மந்திரி வருகிறாராம்

புதுடில்லி, செப். 5—

சென்னை, திரு-கொச்சி, ஆந்திரா, ஐதராபாத், மைசூர் மாநிலங்களில் அரிசி விலை ஏற்றத்தைத் தடுப்பதற்காக சம்மந்தப்பட்ட மாநில சர்க்கார்கள் ஏராளமான நியாய விலைக் கடைகளைத் திறப்பதற்கு டில்லி சர்க்கார் உதவுமாம்.

வடநாட்டில் கோதுமை விலை ஏற்றத்தைத் தடுப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் போலவே தென்னாட்டில் அரிசி விலை ஏற்றத்தையும் தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது பற்றி மாநில மந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, மத்திய உணவிலாகா துணை அமைச்சர் எம். வி. கிருஷ்ணப்பா சென்னை வருகிறாராம்.

சூயஸ் சிக்கல்

நாசர்-மென்ஜிஸ் குழு சந்திப்பு

கெய்ரோ, செப். 5—

சூயஸ் பற்றிய டல்லஸ் திட்டத்தை எகிப்திய குடியரசுத் தலைவர் நாசரிடம் எடுத்துரைப்பதற்காக வந்துள்ள மென்ஜீஸ் குழுவினர், பேச்சு வார்த்தை தொடர்ந்து நடப்பதாகவும், இன்று அதிகமான உறுப்பினர்கள் நாசருடன் பேசினர் என்றும் கூறியிருக்கின்றனராம்.

வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புகள்

புதுடில்லி, செப். 5—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பெரிய நகரங்களிலுள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்களில் தனியாக வாலிபர்களுக்கு வேலை தரும் 'சர்வீஸ்' ஒன்று ஆரம்பிக்க மத்திய சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனராம்.

வேலை தேடுபவர்களுக்கு, தங்கள் படிப்புத் திட்டங்கள், வேலைகள் தேர்ந்தெடுப்பது ஆகியவை குறித்தும் ஆலோசனைகள் கூறப்படுமாம்.

சில விசேடத்துறைகளில் வேலை வாய்ப்பிற்கு சந்தர்ப்பம் அளிப்பதற்கும் பயிற்சி வசதிக்கும் இந்த உத்தரவு வழிகாட்டும் என்றும், மாநில சர்க்கார்களைக் கலந்தாலோசித்து 53 வேலை தேடித்தரும் நிறுவனங்களில் வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கும் பிரிவுகள் துவக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய பிரிவுகள் துவக்கத்தில் 8 ஏற்படுத்தப்படுமாம்.

மேலும், இப்போது இயங்கிவருகின்ற வேலை தேடித்தரும் நிறுவனங்களின் எண்ணிக்கை 137-லிருந்து திட்ட காலத்தின் இறுதியில் 256 ஆக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சொந்த இனத்தவருக்கு டெல்லி காட்டும் பரிவு!

மூன்றுவகை 'அகதி'களுக்கு உடனடி நஷ்ட ஈடு

ஓடி வந்தோருக்கு ரூ. 25-கோடி தரப்படுகிறது

பாடியாலா, செப். 5—

மூன்றுவகையான அகதிகளுக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்கும் திட்டம் ஒன்றை சர்க்கார் சீக்கிரமே அமுல் செய்யும் என்று அகதி புனரமைப்பு இலாகா மந்திரி மேகர்சந்த் கன்ன கூறியிருக்கிறார்.

65 வயதுக்கு மேற்பட்டவர்கள், விதவைகள், ரூ. 10,000-த்திற்குக் குறைவாக நஷ்டஈடு கோருபவர்கள் ஆகியோருக்கு உடனடியாக நஷ்டஈடு வழங்கும் ஏற்பாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறதாம்.

இந்தத் திட்டத்தினால் சுமார் 85,000 பேர் பலனடைவர் என்றும், ரூ. 25 கோடிவரை அவர்களுக்குத் தரப்படும் என்றும் மந்திரி விளக்கம் கூறியிருக்கிறார்.

அகதிகளுக்கு வாழ்வு தரும் ஏற்பாடுகள் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் முடியும்வரை தொடர்ந்து நடைபெறும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

1956 ஜூன் முடிய 1,25,000 அகதிகளுக்கு ரூ. 35 கோடி வரை நஷ்டஈடு தரப்பட்டிருப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

★

நகர்ப்புறங்களில் வேலையின்றித் தவிப்போர் 31 இலட்சம் பேர்களா?

வேலை தேடிப் பெயர் பதிவு செய்வோர் தொகை நாளுக்கு நாள் வளருகிறதாம்

புதுடில்லி, செப். 6—

1954-ம் ஆண்டு ஜூலை இறுதியில் 5,90,000 ஆகவும், 1955 ஜூலை இறுதியில் 6,60,000 ஆகவும் இருந்த வேலை தேடிப் பெயரைப் பதிவு செய்வோரின் எண்ணிக்கை, 1956-ம் ஆண்டு ஜூலை இறுதியில் 7,92,000 ஆக உயர்ந்திருக்கிறதாம்.

இப்படி வேலை தேடித்தரும் நிறுவனங்களில் பெயர் பதிவு செய்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள்—ஆண்டுக்கு ஆண்டு வளருவது, நகர்ப்புறங்களிலும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதையே குறிக்கிறது என்று அதிகாரிகள் கூறுகின்றனராம்.

1954-ம் ஆண்டில் நடத்தப்பட்ட மாதிரி 'சர்வே'யில், நகர்ப்புறங்களில் வேலையற்றிருப்போர் தொகை 22,40,000 என்று கணக்கிடப்பட்டதாம்.

வேலையற்றிருப்போரில் சுமார் 25 சதவிகிதம் பேர் தங்கள் பெயரைப் பதிவு செய்கின்றனர் என்றும் அதிகாரிகள் தகவல் தந்திருக்கின்றனர்.

இந்தக் கணக்குப்படி பார்த்தால், 1956 ஜூலை இறுதியில் 7,92,000 பேர் வேலை கோரி பதிவு செய்திருக்கின்றபடியால் மொத்தம் 31,70,000 பேர் வரை நகர்ப்புறங்களில் வேலையின்றித் தவிப்பவர்களாயிருக்க வேண்டும் என்றாகிறது.

வேலையில்லாது திண்டாடும் மருத்துவப் பட்டதாரிகள்

227 பேர் பெயர்ப் பதிவு செய்துள்ளனராம்

புதுடில்லி, செப். 4—

1956 ஜூன் இறுதியில் வேலை தேடித்தரும் நிறுவனங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொண்டிருக்கும் மருத்துவப் பட்டதாரிகளின் எண்ணிக்கை 227 என்றும், இவர்களில் 70 சதவிகிதம் பேர்—அதாவது 159 பேர்கள் மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

கல்கத்தா நகர நிறுவனத்தில் மட்டும் 112 பேர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்திருக்கின்றனராம்.

ஏகாதிபத்தியவாதிகளால் கொல்லப்பட்டோர் 13,000 பேர்!

அல்ஜீரிய விடுதலைப் போரில் பலியானோர் எண்ணிக்கை

ஆல்ஜியர்ஸ், செப். 5—

அல்ஜீரிய விடுதலைப் போரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,000 பேர் என்று சர்க்கார் தரப்பில் கூறப்பட்டாலும், தேசிய விடுதலை இயக்கத்தவர் கணக்குப்படி 13,000 பேர்வரை பலிகொள்ளப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

பிரெஞ்சுத் துருப்புகளில் சுமார் 1,350 பேர்வரை உயிரிழந்தனர் என்றும் 2,650 பேர் காயம்பட்டனர் என்றும் கூறப்படுகிறது; 625 துருப்புகள் காணப்படவில்லையாம்.

தேசியவாதிகளில் 5,336 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், 836 பேர் படுகாயமுற்றிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு

சென்னை 6—9—'56 வியாழன்

துரிதமாக உணர வேண்டும்

"........என்னைப் பொறுத்த வரையில் இந்த மாநில எல்லைகளை எல்லாம் அழித்துவிட்டு இந்தியா முழுவதையும் ஒரே 'யூனிட்டரி' ஆட்சியின்கீழ் கொண்டுவந்துவிடலாம் என்பேன். ஏனெனில் இப்போது மாநிலங்களுக்கு எந்த விதமான அதிகாரமும் இல்லை.

"........தங்களுடைய காரியங்கள் நடைபெறுவதற்கு ஒவ்வொருவரும் சென்னையையோ, கர்நூலையோ எதிர்பார்க்க முடிவதில்லை. டில்லியைத்தான் எதிர்நோக்க வேண்டியுள்ளது,"

என்று ஆந்திரத் தலைவர்களுள் ஒருவரான தென்னேட்டி விசுவநாதம் அவர்கள், சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசும் போது குறிப்பிட்டிருப்பது, இந்திய அரசியலில் டில்லியின் 'நிலை'யைத் தெளிவுபடுத்துவதாக அமைந்திருக்கிறது.

மாநில அரசுகள் வெறும் நகரசபைகள் போன்று அதிகாரம் ஏதும் இல்லாதவையாக இருப்பதையும், அதிகாரங்கள் அனைத்தும் டில்லியிலேயே குவிந்திருப்பதையும் ஆந்திரத் தலைவர் தென்னேட்டி, மன வேதனையோடு எடுத்துரைத்துள்ளார்.

அப்படி டில்லி, தன்னிடம் குவித்து வைத்துக்கொண்டுள்ள அதிகார பலத்தால், தென்னாட்டு மக்களை எப்படி நடத்துகிறது என்பதை, கேரள காங்கிரஸ் தலைவர்கள் விளக்கியிருக்கின்றனர்.

"எங்கள் மக்கள் மிகவும் ஏமாற்றப்பட்டு விட்டார்கள். டில்லி சர்க்காரை அணுகி எங்களது தொழில் பிரச்சினைகள்பற்றி எடுத்துக் கூறி, ஒரு நீர்--மின்சார உற்பத்தித் திட்டம் வேண்டும் என்றோ, அல்லது அது போன்றே ஒரு பெரும் தொழிற்சாலை வேண்டும் என்றோ கேட்டால், எங்கள் கோரிக்கையை ஏற்க டில்லி மறுத்துவிடுகிறது.

"எங்கள் மாநிலத்திற்குச் சென்று பக்ரா—நங்கலின் சிறப்பு குறித்தும், தாமோதர் திட்டத்தின் சிலம் குறித்தும் நாங்கள் பாடினால்-பம்பாயில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை குறித்தும், விந்தியத்திற்கு வடக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று புதிய இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் குறித்தும் எடுத்துரைத்தால், எங்கள் மக்கள் உடனே 'எங்களுக்கு என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்? கேரளத்தைப்பற்றி என்ன கூறுகிறீர்கள்? தென்னாட்டில் என்ன தொழிற்சாலை துவங்கினீர்கள்?' என்று கேட்கிறார்கள்; நாங்கள் என்ன பதில் கூறமுடியும்?"

இது வ. எம். தாமஸ் என்ற கேரள காங்கிரஸ் எம். பி. டில்லியின் போக்கு குறித்துத் தந்திருக்கும் விளக்கம்.

ஸ்ரீகண்டன் (நாயர்) என்ற மற்றொரு கேரள காங்கிரஸ் எம். பி., 'தொழில் துறை அபிவிருத்தியில் தென்னாட்டிற்கு—குறிப்பாகக் கேரளத்திற்கு, டில்லி ஓரவஞ்சனை புரிந்துவருகிறது; பாரபட்சமாக நடந்துகொள்கிறது. இந்த ஓரவஞ்சனை செய்யும் போக்கு நீடிக்குமானால், நான், இந்த மக்கள் சபையில் எச்சரிக்க விரும்புகிறேன்—இந்திய யூனியனிலிருந்து (தென்னாடு) பிரிந்து போய்விட வேண்டும் என்ற எண்ணம் உச்சம் பெறும். ஏற்கனவே அப்படி ஒரு கோரிக்கை இருந்தும் வருகிறது' என்று எச்சரித்திருக்கிறார்.

இந்தியாவில், 'டில்லி'தான் 'தேவாதி தேவன்' என்பதை ஆந்திரத் தலைவர் ஒருவரும், அந்தத் 'தேவாதி தேவன்' வடநாட்டு மக்களை வாழ்விக்க மட்டுமே அருள்பாலிப்பான்' என்பதைக் கேரளத் தலைவர்களும், மிக்க மனவேதனையுடன் முரசறைந்திருப்பது, 'அகில இந்தியா, பேசுகிற 'விரிந்த கண்ணோட்ட'க்காரர்களின் செவிகளில் விழாதிருக்க முடியாது.

டில்லிப் பெரிய மனிதர்கள் தென்னாட்டு மக்களை—திராவிடர்களை, அவர்கள் தங்களது இந்தோ—ஆரியக் கலாச்சாரத்திலிருந்து வேறுபட்டவர்களாயிருப்பதால், தனிப் பெருமைக்குரிய பழைமையான இன மக்களாக இருப்பதால், தங்களிடம் சந்தர்ப்பவசமாகச் சிக்கிவிட்ட அதிகார பலத்தைக்கொண்டு, தங்களின் நிரந்தர அடிமைகளாக்கிவிட சதிசெய்து, திட்டமிட்டு, புதிய ஏகாதிபத்தியவாதிகளாக உருவெடுத்துவருகிறார்கள் என்ற குரலை, திராவிடத்தின் ஒரு பகுதியான தமிழகத்திலிருந்து நாம் எழுப்பத் துவக்கிய காலத்தில், 'இவர்கள் குறுகிய புத்தி படைத்தவர்கள்' என்று கேலி பேசியவர்கள் — ஆந்திர, கேரளத் தலைவர்கள்—நாம முழக்கியக் குரலை எதிரொலிக்கிற இந்த நேரத்தில் வாயடைத்துப் போவதைத் தவிர வேறு என்ன கூறமுடியும்?

கன்னடத் தலைவர்களில் பலரும் — குறிப்பாக அனுமந்தையா, முகம்மது இமாம், டி. சி. பாசப்பா போன்றவர்களும், டில்லியின் வடநாட்டவரை மட்டும் வாழ்விக்கும் வஞ்சகப் போக்கினை ஏற்கனவே எடுத்துரைத்திருக்கின்றனர்.

ஆந்திர, கேரள, கன்னடத் தலைவர்கள், டில்லிபற்றி அவ்வப்போது வழங்கும் இந்தக் கருத்துக்கள், நிச்சயமாக நமது இலட்சியம் — 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற இலட்சியம் ஈடேறுவதற்குப் பெரிதும் பயன்படுவனவாகும். இது நமக்கு மகிழ்ச்சி தரக் கூடியதுதான். என்றாலும், ஆந்திர, கேரள, கன்னட மக்கள், 'ஏக இந்தியா' என்ற அரசியல் அமைப்பு, 'திராவிடர்' என்ற ஒரு பெரும் இனத்தை—அதன் பெருமைக்குரிய தொன்மைமிகு பண்பாட்டைப் பூண்டோடு அழித்துவிடுவதற்காக, வடநாட்டவரால் கட்டிக்காத்துவரப்படும் ஏகாதிபத்திய அரசியல் அமைப்பு' என்பதைத் துரிதமாகஉணர தலைப்படவேண்டும்.

'ஆங்கிலத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்படும்'

'விஞ்ஞான தொழில் நுணுக்க கல்வி ஆங்கிலத்திலேயே போதிக்கப்படும்'

கல்வி மந்திரிகள் மாநாட்டு முடிவு குறித்து சென்னை கல்வி அமைச்சர் சுப்பிரமணியம்

சென்னை, செப். 4—

"பல்கலைக் கழகங்களைப் பொறுத்தவரையில், தொழில் நுணுக்க, விஞ்ஞானப் பாட போதனை மொழியாக ஆங்கில மொழியே இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளுக்கு நீடித்திருக்கும்; அல்லது, இந்தி மொழியோ, வட்டார மொழியோ தேவையான அளவுக்கு வளர்ச்சி பெறும்வரையிலாயினும் ஆங்கில மொழியே பல்கலைக் கழகப் போதனை மொழியாக இருக்கும். தொழில் நுணுக்க, விஞ்ஞானப் பாடங்களைத் தவிர மற்றப் பாட போதனைகளுக்கான மொழியை மாற்றியமைக்க வேண்டுமென்று அவசியப்பட்டால், மாநில சர்க்காரோ, பல்கலைக் கழகமோ தேவையான மாறுதல்களைச் செய்துகொள்ளலாம். கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய இரண்டு நாட்களிலும் டில்லியில் நடைபெற்ற மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டின்போது இடைநிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய இரு கல்விச்சாலைகளிலுமே பாடத் திட்டத்தில் ஆங்கிலத்திற்கு இன்னும் அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படலாம் என்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இப்போது இருப்பதைவிட பள்ளிகளில், இன்னும் நல்ல முறையில் ஆங்கில மொழிப் போதனை நடைபெறுவதுடன், ஆங்கில மொழித் தரமும் உயர்வடையும். இடைநிலைக் கல்வியின் கீழ் வகுப்புகளிலிருந்துகூட ஆங்கில மொழி கட்டாய மொழியாகப் போதிக்கப்படும்."

இவ்வாறு, கல்வி மந்திரிகள் மாநாட்டிற்குச் சென்று திரும்பிய சென்னை மாநிலக் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

"5-வது வகுப்பிலேயேகூட ஆங்கில மொழி போதிக்கப்படலாம்; ஆனால், சர்க்காருக்கு இது குறித்து ஆலோசனை கூறுவதற்கென நியமிக்கப்பட்ட சட்டசபைக் கல்விக் குழு இது குறித்து ஒரு முடிவு செய்யும். இப்போது விருப்பப் பாடமாக ஆங்கிலம் போதிக்கப்பட்டுவருகிற உயர்தர ஆரம்பப் பள்ளிகளிலும் ஆங்கிலம் கட்டாய மொழியாக்கப்படும்," என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சென்னை மாநிலத்தில் இந்தி மொழிப் போதனை குறித்து அவர் தம் கருத்தைத் தெரிவிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"பள்ளிகளில் எட்டாவது ஆண்டிலிருந்து இந்தி மொழி விருப்பப்பாடமாகப் போதிக்கப்பட வேண்டுமென்று சர்க்கார் செய்துள்ள முடிவு திருப்தி அளிக்கக் கூடியதாக உள்ளது. இந்தி மொழி விருப்பப்பாடமாக இருந்தாலும்கூட, அம்மொழியில் கட்டாயமாகத் தேர்வு நடைபெற வேண்டும். எல்லாப் பள்ளிகளிலுமே இந்தி மொழிப் போதனையைக் கண்டிப்பாக்குவதற்குச் சர்க்கார் சட்டமியற்றும்" என்று குறிப்பிட்டார்.

மேலும் அவர், இந்தியாவின் தேசிய மொழியாக இருக்கும் இந்தியின் முக்கியத்துவத்தையும், வருங்காலத்தில் அகில இந்திய சர்க்கார் துறைகளில் வேலை தேடுவோர் இந்திமொழியில் போட்டிப் பரீட்சைகள் எழுதவேண்டியிருப்பதும் குறித்துப் பேசுகையில், இந்த மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் பெரும்பான்மையான எண்ணிக்கையில் இந்தி மொழி கற்கவேண்டுமென்றும், அம்மொழி இப்போது விருப்பப்பாட மொழியாகவே பள்ளிகளில் இடம்பெற்றிருந்தாலும் மாணவர்கள் கண்டிப்பாகப் பயில வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

விவசாயத் துறையில் அபிவிருத்தி

முடிவு செய்யவேண்டியது விவசாயிகளே!

அமெரிக்க நிபுணர் கருத்து

ஐதராபாத், செப். 4—

"உற்பத்திச் செலவு குறையும் பட்சத்தில், விவசாயத்தை இயந்திர மயமாக்குவதே விரும்பத்தக்கதாகும். உற்பத்திச் செலவு அதிகமானால் விவசாயத்தை இயந்திரமயமாக்குவதில் எவ்வித பயனுமில்லை. விவசாயம் என்பது விரிவான ஒரு தொழிலாகும். எனவே, அத்தொழிலில் செய்யவேண்டிய அபிவிருத்தி வேலைகள் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதை விவசாயிகளே முடிவு செய்துகொள்ள விட்டுவிட வேண்டியது அவசியமாகிறது."

இவ்வாறு, ஜான் வில்சன் என்ற அமெரிக்க நிபுணரொருவர் இங்கு கூறியிருக்கிறார்.

விவசாய இலாகாவோ, திட்டக் குழுவோ நிர்ணயிக்கும் இலட்சிய அளவுகளை அடைவதற்குக் குடியானவர்கள் தீவிர முயற்சி எடுத்துக்கொள்ளாவிட்டால், இதனால் பிரயோசனம் எதுவும் ஏற்படப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் கூறியதாவது:—

உணவுத் தானியத் தேவைக்கும் விநியோகத்திற்குமிடையே ஏற்படும் மோதுதல்களை விலைக் கட்டுப்பாட்டினாலோ, கொள்முதல் மூலமாகவோ சமாளித்துவிட முடியாது. விலைகள் விஷம்போல் ஏறவிட்டுவிட வேண்டும். அப்போது பதுக்கப்பட்டிருக்கும் பொருள்கள் வெளியேவந்துவிடும்; இதனால் உற்பத்தி பெருகும். எனினும் ஒன்றுக்குப் பெருகும் உற்பத்திக்கும் பதுக்கி வைத்திருக்கும் நபரின் உற்பத்திக்குமிடையே வித்தியாசம் உண்டு. மக்கள் தொகை அதிகரிப்பின் விளைவில் ஏற்படும் உணவுப் பிரச்சினையை சமாளிப்பதற்குத் தனி நபர் உற்பத்தியே மிகவும் முக்கியம்."

தென் மாநிலங்களில் குடியேற்றப்பட்ட அகதிகளில் 1336 பேர்களுக்கு இந்த ஆண்டு ஜூன் திங்கள் முடியத் தரப்பட்ட நஷ்டஈடுத் தொகை ரூ. 50,07,537 என்று மாநிலங்கள் சபையில் உதவி மந்திரி ஒருவர் தகவல் தந்திருக்கிறார்.

தமிழையும் ஆட்சி மொழியாக்குக!

மலாயா தமிழர் கோரிக்கை

கோலாலம்பூர், செப். 4—

"தமிழ் மொழியையும் மலாயாவின் ஆட்சி மொழியாக ஆக்கவேண்டும்"

என்று அகில மலாயா தமிழ் சங்கம் தனது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

"குடியுரிமை அந்நாட்டில் பெறுவதற்கு மொழிப் பரீட்சை வைப்பதை சர்க்கார் இரண்டாண்டுகளுக்கு நிறுத்திவைக்க வேண்டும்"

என்றும் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மலாயா சீனர்கள் சங்கமும், இதுபோன்று தீர்மானங்களை ஏக காலத்தில் நிறைவேற்றியுள்ளது என்பது குறிப்பிடத் தகுந்ததாகும்.

ரூ.1,10,000 செலவில்!

ஏழு கைத்தொழில் திட்டங்கள்

புதுடில்லி, செப். 2—

கைத்தொழில்கள் வளர்ச்சிக்காகச் சென்னை மாகாணத்தில் மேற்கொண்டும் ஏழு பயிற்சியுடன் கூடிய உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும். இதற்காக மொத்தம் ரூ. 1,10,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் சரிகை, சித்திர வேலையுடன் கூடிய தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சியளிக்க ஒரு நிலையம் துவங்கப்படும். ஆண்டுதோறும் 15 பேருக்குப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி பெறும் காலத்திற்கு ஒவ்வொருவருக்கும் மாதம் 1-க்கு ரூ. 25 உபகாரச் சம்பளமும், வட்டியில்லாக் கடனாக ரூ. 50-ம் வழங்கப்படும். பயிற்சி பெற்றபின் தங்கள் தொழிலை நடத்த இந்தக் கடன் வசதியளிக்கப்படும்.

சாயமிடுதல், அச்சிடுதல் ஆகிய தொழில்களை வளம்பெறச் செய்வதற்காக இராசபாளையத்திலும், மண் பாண்டத் தொழில் வளர்ச்சிக்காக மானாமதுரையிலும் பயிற்சி, உற்பத்தி நிலையங்கள் தொடங்கப்படும்.

கோபிச் செட்டிப்பாளையத்தில் கை இயந்திரச் சித்திர வேலைப் பள்ளி ஒன்று தொடங்கப்படும்; அங்கு 12 பெண்களுக்கு 18 மாத காலத்துக்குப் பயிற்சி அளிக்கப்படும். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 25 உபகாரச் சம்பளம் அளிக்கப்படும் சமூக நலத் திட்டப் பகுதியில் இப்பயிற்சி அளிக்கப்படும்.

ஈரோடில் புதிய மாதிரி மரப் பொம்மைகள் உற்பத்தி செய்யப் பயிற்சி அளிக்கப்படும்; 12 தொழிலாளருக்குப் பயிற்சி அளிக்கப்படுவதுடன், தொழிலை நடத்தத் தேவையான கருவிகளும் அளிக்கப்படும். இவற்றின் விலை ஆண்டு தவணைகளில் வசூலிக்கப்படும். பயிற்சி காலத்தில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 1-க்கு ரூ. 25 வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும்.

வேலூரில் பிரம்புப் பொருள்களை உற்பத்தி செய்யக் கல்வி போதிக்கப்படும். புதிய ரகப் பொருள்களைத் தயாரிக்க ஆண்டுதோறும் 20 மாணவர்கள் பயிற்சி பெறுவர். பயிற்சிக் காலத்தில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 1-க்கு ரூ. 25 வீதம் உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். தங்கள் வீடுகளிலேயே தங்கள் தொழில்களை நடத்துவதற்குப் பயிற்சி முடிந்ததும் அவர்களுக்குக் கடன் அளிக்கப்படும்

மூங்கில், பிரம்புப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக 20 குறவர் இனப் பையன்களுக்கு காசர்கோடில் பயிற்சி வேலை நிலையம் தொடங்கப்படும். ஆண்டுதோறும் 20 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 1-க்கு ரூ 20 வீதம் உபகாரச் சம்பளம் அளிக்கப்படும்.

முதல் மூன்று ஆண்டுக்கு இந்த நிலையத்தை அரசாங்கமே நடத்திவரும். பின்னர் தொழில் கூட்டுறவுச் சங்கமாக மாற்றப்படும்.

இந்திய இரும்புக்கனி—போலந்திற்கு ஏற்றுமதி

புதுடில்லி, செப். 4—

1 இலட்சம் டன் இரும்புக்கனிப் பொருட்களை இந்தியா போலந்து நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதென்று மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி, இம்மாதமே, இந்தியா அனுப்பவேண்டிய இரும்புக் கனிப் பொருளின் முதல் பகுதி அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

*************************-*************************

தலைமை நிலையச் செய்தி :

சென்னைத் தோழர்கள் கவனிக்க!

சென்னை நகரின் பல வட்டங்களிலும் உள்ள கழகத் தோழர்கள், இதுவரை தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளாமலிருந்தால் உடனடியாக இந்த செப்டம்பர் மாதம் 21-ந் தேதிக்குள்ளாகக் கீழ்க்கண்டுள்ள இடங்களில் சென்று விவரம் அறிந்து, தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளவேண்டுகிறோம்.

கழகத் தோழர்கள் தங்களைப் பதிவு செய்துகொள்வதுடன் நின்றுவிடாது, தங்கள் வட்டத்தில் உள்ள மக்களில் இதுவரை வாக்காளர் ஆகாதவர்களை உடனே வாக்காளராகப் பதிவு செய்துகொள்ளுமாறு ஆவன செய்ய வேண்டுகிறோம்.

★

விவரங்கள் :

சென்னை நகரில் எல்லாத் தொகுதிகளுக்கும் வாக்காளர் பட்டியலில், திருத்தங்கள் அடங்கிய மொத்தமான பூர்வாங்கப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு விட்டன. வாக்காளர் பட்டியலின் பிரதியும், திருத்தப்பட்டியலும் சென்னை நகர் மன்றக் (ரிப்பன்) கட்டிடத்தில், பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

இவற்றின் பிரதிகளை நகரிலுள்ள போலீஸ் நிலையங்கள், பதிவு (ரிஜிஸ்டர்) காரியாலங்களிலும், கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு இடங்களிலும், அலுவலக நேரங்களில் பொதுமக்கள் சென்று பார்வையிடலாம்.

பட்டியலில் புதிதாகப் பெயர்களைச் சேர்ப்பதற்கான கோரிக்கைகளும், எந்த ஒரு பெயர் சேர்க்கப்பட்டிருப்பதை ஆட்சேபிக்கும் கடிதங்களும், திருத்த அதிகாரிக்கு (நகரசபை கமிஷனருக்கு), அதற்கான குறிப்பிட்ட 'பாரத்'தில் பூர்த்திசெய்து, 1956 செப்டம்பர் 21-ந் தேதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்; இவற்றை அவரிடமோ, அல்லது வாக்காளர் பட்டியல் அதிகாரி (நகர சபை ரெவினியூ அதிகாரி, யிடமோ நேரில் கொடுக்கலாம்; அல்லது, பதிவுத் தபால்மூலம் திருத்த அதிகாரிக்கு அனுப்பலாம்.

'டிவிஷன்'—எண்—பெயர்கள் ;

வாக்காளர் பட்டியல் பிரசுரிக்கப்படும் இடங்கள்
(கார்ப்பொரேஷன் டிவிஷனல் ஆபீஸ்)

1. புதுவண்ணாரப்பேட்டை
 16, கும்மாளம்மன் கோயில் தெரு.
2. இராயபுரம்
 14, உசேன்மேஸ்திரி தெரு.
3. சிங்காரத் தோட்டம்
 103, மன்னார்சாமி கோயில் தெரு.
4. சஞ்சீவிராயன்பேட்டை
 15, சிமிட்டெரி ரோடு.
5. கொருக்குப்பேட்டை
 462, திருவொற்றியூர் பெரிய சாலை.
6. வியாசர்பாடி
 46, மாதவரம் பெரியசாலை, பெரம்பூர்.
7. பேசின்பிரிட்ஜ்
 சானிடரி இன்ஸ்பெக்டர் ஆபீஸ்.
8. பெத்துநாய்க்கன்பேட்டை
 93, அம்மன்கோயில் தெரு.
9. ஏழுகிணறு
 31/3 செயின்ட் சேவியர் தெரு (மாடி).
10. அம்மன்கோயில்
 13, பிடாரியார்கோயில் தெரு.
11. முத்தியாலுப்பேட்டை :
 சிடி யூத் லீக் கிளப், ஜெங்கட அய்யர் தெரு.
12. ஆர்பர் :
 39, ஜெகாங்கீர் தெரு.
13. கச்சாலீஸ்வரர் :
 நகரசபை ஆண்கள் பாடசாலை 20, செம்புதாஸ் தெரு.
14. கொத்தவால்சாவடி :
 3, கர்தப்பசெட்டித் தெரு
15. சௌகார்பேட்டை :
 25, தாதா முத்தியப்பன் தெரு.
16. ட்ரேவெலியன் பேசின் :
 நகரசபை மருந்துச்சாலை, பேசின் வாடர் ஒர்க்ஸ் தெரு.
17. சூளை :
 29, ஸ்மித் பீல்ட் மார்க்கெட் (கானாத்தியப்ப முதலி தெருவுக்கு எதிரில்).
18. புளியந்தோப்பு
 ட்ரெயினேஜ் ஸ்டோர்ஸ், பேசின் பிரிட்ஜ் ரோடு.
19. பெரம்பூர் பாரக்ஸ்
 ஹைதரி கார்டன், 24-பி. குக்ஸ் ரோடு.
20. செம்பியம்
 ரோடு அண்டு பில்டிங் ஓவர்சியர் ஆபீஸ், 20/23, பேப்பர் மில்ஸ் ரோடு.
21. அயனாவரம்
 1/1-எ, கொன்னூர் பெருஞ் சாலை.
22. கீழ்ப்பாக்கம்
 12 பி, ஆர்ம்ஸ் ரோடு.
23. புரசைவாக்கம்
 30, மேனார்டு தெரு.
24. கோசப்பேட்டை
 22, வடமலை பிள்ளை தெரு.
25. வேப்பேரி
 55, வெள்ளாள தெரு
26. பெரியமேட்
 நகர சபை முகம்மதிய ஆண்கள் பாடசாலை, 1-எ, சேவல் ஆஸ்பிடல் ரோடு.
27. எடப்பாளையம்
 நகர சபை பெண்கள் பாடசாலை.
28. பார்க் டவுன்
 சானிடரி இன்ஸ்பெக்டர் ஆபீஸ், கொளர்ந்தை தெரு.
29. நேப்பியர் பார்க்
 நகர சபை ட்ரெயினேஜ் ஸ்டோர்ஸ்.
30. சிந்தாதிரிப்பேட்டை
 நகர சபை ஆண்கள் பாடசாலை, 43/1, அருணாசல நாயக்கன் தெரு.
31. கோமளீசுவரன்பேட்டை
 92, ஆரிஸ் ரோட்
32. எழும்பூர்
 ஓவர்சியர் ஆபீஸ், வீராசாமி பிள்ளை தெரு.
33. ஆயிரம் விளக்கு
 50, மவுண்ட் ரோடு, சத்தீட்ரல் போஸ்ட்.
34. நுங்கம்பாக்கம்
 11, நூர் வீராசாமி ஐயர் தெரு.
35. கோடம்பாக்கம்
 17. சூளைமேடு ரோடு.
36. தியாகராயநகர் (தெற்கு)
 17, கோவிந்தன் தெரு.
37. இராயப்பேட்டை
 48, கடைத்தெரு.
38. புதுப்பாக்கம்
 387. பைகிராப்ட்ஸ் ரோடு.
39. திருவட்டீசுவரன்பேட்டை
 நகரசபை மருந்துச்சாலை, தய்யார் சாகிப் தெரு.
40. சேப்பாக்கம்
 18/19. சி. என். கிருஷ்ண சாமி ரோடு.
41. திருவல்லிக்கேணி
 நகரசபை மருந்துச்சாலை, 25. பைகிராப்ட்ஸ் ரோடு.
42. ஜாம் பஜார்
 14. பள்ளப்பன் தெரு, திருவல்லிக்கேணி.
43. மீர்சாகிப்பேட்டை
 99, வெங்கடாசல முதலி தெரு.
44. மைலாப்பூர் (வடக்கு)
 96, இராயப்பேட்டை பெருஞ்சாலை.
45. மைலாப்பூர் (தெற்கு)
 ஓவர்சியர் ஆபீஸ், கச்சேரி ரோடு.
46. தேனாம்பேட்டை
 நகரசபை ஷெட், பீமண்ண முதலி தெரு, ஆள்வார் பேட்டை.
47. தியாகராயநகர் (வடக்கு)
 நகரசபை மருந்துச்சாலை, சிவஞானம் ரோடு.
48. சைதாப்பேட்டை
 நகரசபை மருந்துச்சாலை, 33, சடையப்ப முதலி தெரு.
49. கிண்டி
 65/1, மவுண்ட் ரோடு.
50. அடையார்
 பழைய பெட்ரோல் பங்க், பிராடீஸ் ரோடு.

★

சென்னை நகரிலுள்ள தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகள், இதுகுறித்துத் தீவிர கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—தி. மு. க. தலைமை நிலையம்.

*************************-*************************

செய்திச் சுருள்

★

எஸ். எஸ். இராசேந்திரன்

பஞ்சம்பட்டி பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களுக்கு திண்டுக்கல்லை அடுத்த பஞ்சம்பட்டி பஞ்சாயத்துப் போர்டு சார்பில் 18—9—56 மாலை 5 மணிக்கு வரவேற்பு அளிக்கப் படும்.

அன்று இரவு 10 மணிக்கு பஞ்சாயத்து போர்டு வானொலி நிலைய நிதிக்காக தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் தலைமையில், மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் முன்னிலையில் சமூக சீர்திருத்த நாடகம் ஒன்று நடைபெறும்.

சென்னை 'ஸ்பென்சர்' தொழிலாளர் சங்கம்

17—8—56 மாலை 6 மணி அளவில் சென்னை ஸ்பென்சர் தொழிலாளர் சங்கப் பொதுக் குழுக் கூட்டம், திரு எஸ். சி. சி அந்தோணி தலைமையில் நடைபெற்றது. செயலாளர் தோழர் டி. ஏ. சண்முகம் வருடாந்திர அறிக்கையை வாசித்தார்.

பின்னர் சங்க நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. தோழர் எஸ். சி. சி. அந்தோனி அவர்கள் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மற்றும் துணைத் தலைவர்கள், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுரை அமெரிக்கன் கல்லூரி வள்ளுவர் கழகத் துவக்கம்

10—8—56 மாலை 5 மணிக்கு, மதுரை அமெரிக்கன் கல்லூரி வள்ளுவர் கழகத் துவக்க விழா மாணவர் தலைவர் தோழர் சாலமோன் பாப்பையா தலைமையில் நடைபெற்றது. கல்லூரித் தலைவர் அனைவரையும் வரவேற்றார். தோழர் க. அன்பழகன் விழாச் சொற்பொழிவு நிகழ்த்தி, கழகத்தைத் துவக்கிவைத்தார்.

மதுரை கல்லூரி செந்தமிழ் சங்கத் துவக்கம்

20—8—56 மாலை 4½ மணிக்கு, மதுரைக் கல்லூரி செந்தமிழ் சங்கத் துவக்க விழா மாணவர் தலைவர் சு. ப. மூக்கன் தலைமையில் நிகழ்ந்தது. திரு. க. திருமாறன் விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். செயலாளர் இலக்குமணப் பெருமான் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

செயங்கொண்டத்தில் விசைத் தறி எதிர்ப்புப் பொதுக்கூட்டம்

19—8—56 மாலை செயங்கொண்டம் கைத்தறி நெசவாளர் சங்க ஆதரவில், காந்தி பூங்கா அருகிலுள்ள திடலில் தோழர் எம். பாசுகரன் தலைமையில் மேற்படி பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அ. க. சே. இரசூல், ப. கன்னையன், சு. இளநாகம் மற்றும் சிலர் பேசினர் சிறிய முதலாளிகளையும், பல இலட்சக்கணக்கான நெசவாளர்களையும், நெசவு செய்து பிழைத்து வரும் தாய்மார்களையும் பாதிக்கும் விசைத் தறியை மத்திய அரசியலார் ஆதரவுடன் தமிழக ஆட்சியாளர்கள் கொண்டு வர முயற்சிப்பதைக் கண்டித்தும், உடனடியாக அத்திட்டத்தைக் கைவிட வேண்டுமென்றும் இன்றேல் விசைத் தறியை எதிர்த்துப் போராட்டம் ஆரம்பிப்பதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

• • •

தலைவர் உண்ணா நோன்பு — முதலாளிகள் இசைவு

ஏழை நெசவாளருக்கு உயர்ந்த கூலி தர வேண்டுமாறு மாஸ்டர் வீவர்களைக் கேட்டுக் கொண்டு, கடந்த 14—8—56ந் தேதி முதல் தறி மறியல் செய்து வந்தனர்; பல முறையில் வேண்டியும் பயனளிக்காததால் தி. மு. கழகத் தோழர் வை. இராசகோபால் தந்தையும், நெசவாளர் சங்கத் தலைவருமான தோழர் ப ந. ரா. வைத்திலிங்கம் 18—8—56 முதல் உண்ணா நோன்பு மேற்கொண்டார். கழகச் செயலாளர் தோழர் சு. இளநாகம் நெசவாளர்கள் கோரிக்கை வெற்றி பெற பாட்டாளிகளுடைய போராட்டத்திற்குத் துணை புரிய தி மு கழகம் தயார் என்று அறிவித்தார்.

நெசவாளர்கள் தங்கள் கோரிக்கையையொட்டி, 14—8—56 முதல் 20—8—56 வரை வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். பக்கத்து ஊர்களான செங்குந்தபுரம், உதயநத்தம், தேவாமங்கலம், ஆண்டிமடம் ஆகிய இடங்களிலும் மறியல் நடைபெற்றது. அதன் எதிரொலியாகப் பல்லாண்டுகளாய் பிடித்துவந்த 'மகிமை' பணம் இனி பிடிப்பதில்லையென்றும், நெசவொன்றிற்கு ரூ. 3 வீதம் கூலி உயர்வு தரவும் முதலாளிகள் சம்மதித்தனர்.

* * *

பல கட்ட விற்பனை வரியை எதிர்த்து அர்த்தால்

பல கட்ட விற்பனை வரியை எதிர்த்து 26—8—56-ந் தேதி இங்கு பூரண கடையடைப்பு செய்யப்பட்டது (ந. - கி.)

தமிழ் நாடு ஜிப்சம் சுரங்கத் தொழிலாளர் சங்கம்

26—8—56 காலை 11 மணிக்கு திருச்சி மாவட்டம் பெரம்பலூரில், திரு. எம். வடிவேல் தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர் எம். வடிவேல் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பின்னர் ஜிப்சம் சுரங்கத்தில் வேலை செய்யும் எல்லா தொழிலாளர்களுக்கும் சர்க்கார் நிர்ணயித்துள்ள குறைந்தபட்சச் சம்பளத் திட்டப்படி சம்பளம் கொடுக்குமாறு நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்வதுடன், இது விஷயமாய் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டும், ஜிப்சம் சுரங்கத்தில் சுமார் 5,000-த்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைசெய்து வருவதால், இந்தப் பகுதியில் தொழிலாளர் நல அதிகாரி நியமிக்க வேண்டுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், அச்சுரங்கத்தை அரசாங்கம் தேசியமயமாக்க வேண்டுமென்றும், இப்பகுதியில் ஜிப்சம் ஏராளமாக இருப்பதால் இங்கு சம்பந்தப்பட்ட உரம்போன்ற தொழிற்சாலைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், ஜிப்சம் சுரங்கப் பகுதியில் நேரில் வந்து ஆராய்ச்சி செய்ய வரும் நிபுணர்களுக்கும் மாணவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை—சைனாபசார் நடைபாதை வியாபாரிகள் சங்கம்

26—8—56 காலை 9 மணிக்கு, சென்னை—சைனாபசார் நடைபாதை வியாபாரிகள் சங்க நிர்வாக உறுப்பினர் கூட்டத்தில், தோழர் ஆர். எஸ். குமாரசாமியைத் தலைவராகக்கொண்ட சங்கப் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை நகர சிறுவர் சங்கம்

2—9—56 மாலை 6 மணிக்கு மேற்படி சங்கத்தின் ஆதரவால் பொதுக் குழுக் கூட்டம், சங்கக் காரியாலயத்தில், திரு. பி. பாலகோபால் தலைமையில் நடைபெற்றது. திரு பி பாலகோபால் அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப் பட்டது.

வேதநாயகர் விழா

24—8—56 மாலை 3-30 மணியளவில் சென்னை—இராயபுரம் தூய இராயப்பர் உயர்நிலைப்பள்ளி திருவள்ளுவர் திடலில் தோழர் கி. தியாகராசன் தலைமையில், மேற்படி விழா நடைபெற்றது. தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர் பக்தவத்சலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பாராட்டு விழா

29—8—56-ல், ஆமதாபாத் நரோடா வட்ட தி. மு. கழகத்தில், கிளைக் கழகத்திற்குக் கடிகாரம் அன்பளிப்பாகக் கொடுத்த தோழர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. தோழர் கா. முனுசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார். விழாவிற்குத் தோழர் ச. கணேசன் தலைமை தாங்கி கடிகாரத்தை இயக்கவைத்தார். தோழர் ச. விநாயகம் இன்னிசை விருந்தளித்தார்.

நன்றி அறிவிப்பு

சென்னை இராயபுரம் கல்மண்டபத்திலுள்ள சந்திரபவான் உணவு விடுதியின் பெயர்ப் பலகையிலிருந்த 'பிராமணாள்' எனும் பதத்தை நீக்கிவிடுமாறு வட சென்னை வாசிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவ்விடுதியின் உரிமையாளர் அவ்வாக்கியத்தை மறைத்துவிட்டார். அவரின் பெருந்தன்மைக்குப் பாராட்டி வட சென்னை வாசிகள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வேலை நிறுத்தம் செய்த ஆலைத் தொழிலாளர்கள்

ஆர்ப்பாட்டத்தின்போது போலீசார் துப்பாக்கி பிரயோகமாம்

கொழும்பு, செப். 5—
கடந்த ஒரு வார காலமாகக் கொழும்பு நகருக்கு நாற்பது கல் தொலைவிலுள்ள சிலாவர் எனுமிடத்திலுள்ள எண்ணெய் ஆலை ஒன்றில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வந்தனர். இன்று, அத்தொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டதையொட்டிப் போலீசார் அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கின்றனராம்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மற்றொருவருக்குக் காயம் ஏற்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வேலை நிறுத்தம் மேற்கொண்ட மேற்படி ஆலைத் தொழிலாளர்கள் டெலிபோன் கம்பிகளையெல்லாம் அறுத்தெறிந்து போலீசாரைத் தாக்கியதாகவும், எனவேதான் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டது என்றும் போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டம்

★

வங்கனூர்:
(சித்தூர் மாவட்டம்)
7—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: நரசிம்மன்
பேசுபவர்: க. அன்பழகன்

★

திருநாகேசுவரம்:
ஆர்த்தசாமக் கட்டளைத் தெருவில்
8—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர்:
எஸ். எஸ். கோவிந்தசாமி
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
கே. கே. நீலமேகம்

****

தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

8—9—56 சனி மாலை 6-மணி

கோகலே மண்டபம்

★

தலைவர்:

கே. ஏ. மதியழகன்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

'இலக்கிய இன்பம்'

என்னும் பொருள்பற்றிப் பேசுவார்.

★

நன்கொடை: ரூ. 1; அணா 8,

—தலைமைக் கழகம் (தி. மு. க.

****

கொல்லப்பட்டோர் தொகை 121 ஆக உயர்வு

ஐதராபாத், செப். 5—
மீண்டும் இன்று பெசானி குண்டா நதியிலிருந்து 4 பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அண்மையில் ஐதராபாத்தில் நடைபெற்ற கோர இரயில் விபத்தில் பலியானோரின் தொகை 121-ஆக உயர்ந்துவிட்டிருக்கிறது! இந்தப் பிரேதங்கள் விபத்து நடைபெற்ற இடத்திற்கு வெகு தொலைவுக்கு அப்பால் கண்டெடுக்கப்பட்டனவாம்!

பர்மா இரயில்வேயில் பணிபுரியும் இந்திய எஞ்சினியர்கள்

மூவரைக் கலகக்காரர்கள் தூக்கிச் சென்றுவிட்டனராம்

புதுடில்லி, செப் 5—
பர்மா சர்க்கார் இரயில்வேத் துறையில் வேலை செய்துவந்த மூன்று இந்திய எஞ்சினியர்களை, பர்மா கலகக்காரர்கள் கடத்திச் சென்று, அவர்களைப் பணயக் கைதுகளாக வைத்திருப்பதாகவும், அவர்களை விடுவிக்க, ஒருவருக்கு ரூ 3,000-மும், மற்ற இருவருக்கு ரூ. 1,000 வீதமும் கலகக்காரர்கள் கேட்டுவருவதாகவும், இத்தொகையைப் பர்மா சர்க்கார் கொடுத்து அவர்களை மீட்கச் சம்மதித்திருக்கின்றனரா என்று கேட்டபோது, பர்மா சர்க்கார் தங்களுடைய விரோதிகளுக்குப்பணயத் தொகை கொடுக்கவிரும்பவில்லை என்றும், கடத்திச் செல்லப்பட்ட அந்த எஞ்சினியர்களின் உறவினர்களே பணயத் தொகையைக் கொடுத்து அவர்களை விடுவிக்க முயற்சி எடுத்துக் கொண்டுள்ளதாகவும் டில்லி மக்கள்சபையில் பிரதமர் பண்டித நேரு தகவல் வெளியிட்டிருக்கிறார்.

எல்லைத் தகராறு தீராதாம்!

சென்னை, செப். 5—
நவம்பர் மாதத்தில் கூட சென்னை—ஆந்திரா எல்லைத் தகராறு பற்றியப் பிரச்சினை தீர்க்கப்படுவது சாத்தியமாக இருக்காது என்று, சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

டில்லியில் நடைபெற்ற மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட அவர், ஆந்திர—சென்னை எல்லைத் தகராறுகள் குறித்து மத்திய சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியிருப்பதாகத் தெரிகிறது. ஆந்திர மாநில முதலமைச்சர் கோபாலரெட்டியையும் அவர் சந்தித்து உரையாடினாராம்.

செங்கற்பட்டு நகரத் தோழர்களுக்கு

வேண்டுகோள்

★

"செங்கற்பட்டு நகரத்தில் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளாதத் தோழர்களும் பொது மக்களும், 31-10-56-ந் தேதிக்குள் செங்கற்பட்டு தாலுகா ஆபீசில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன். மற்ற விவரங்கள் செங்கற்பட்டு நகர தி. மு. கழகத்தில் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்,"

என்று செங்கற்பட்டு நகர தி. மு கழகச் செயலாளர் தோழர் செ. அ. பலராமன் அவர்கள் அறிவிக்கிறார்.

திருமணம்

★

7—9—56 காலை 9 மணியளவில். குடவாயில் கீழவீதியில், தோழியர் இராசலட்சுமி—தோழர் இராமகிருட்டிணன் திருமணம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் மு. கருணாநிதி வாழ்த்துரை வழங்குவார்.

* * *

7—9—56 காலை 9 மணியளவில், நம்பம்பட்டி தி. மு. கழக செயலாளர் தோழர் எம். இராமசாமி—தோழியர் மஞ்சக்கால் திருமணம், மணப்பாறை தோழர் காசிநாதன் தலைமையில் அவரது இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் தி. வீ. முத்துக்கிருஷ்ணன் வாழ்த்துரை வழங்குவார்.

* * *

8-9-56 காலை 10 மணிக்கு, மதுரை மாவட்டம் கும்மம்பட்டி தோழர் பெ. முத்துராசன்—தோழியர் அங்கயற்கண்ணி திருமணம், பஞ்சம்பட்டி மணமகன் இல்லத்தில் தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. சமதர்மம், வீ ஆர் மூர்த்தி, இருளப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

7-9-56 காலை 7-30 மணிக்கு சென்னை—மவுண்ட்ரோட், பைராக்ஜங் பகதூர்தெரு, எண்-13 இல்லத்தில், தோழர் க அப்பாதுரை அவர்கள் தலைமையில், தோழர் திருநாவுக்கரசு—தோழியர் சுலோசனா திருமணம் நடைபெறும்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி டி. வி. நாராயணசாமி, தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திரு-தமிழக நெசவாளர் அபாயக் கட்டத்தை நெருங்குகின்றனர்?

நெய்த துணி விலை போகவில்லை

சர்க்கார் மானியத் தொகை கிடைக்கவில்லை

ரூ. 2 இலட்சம் பெறுமான துணிகள் தேக்கம்

திரு-தமிழக நெசவாளர்கள் இப்போதுசெய்த துணிவிலை போகாத நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர் என்று தெரியவருகிறது.

கைத்தறிக்கான நூல் விலை உயர்ந்திருக்கிறது; ஆனால் அதே போது, நெய்த துணியின் விலை இறங்கிவிட்டது. மேலும் விலை இறங்கியும் கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் ரூ 2 இலட்சம் பெறுமானவை தேங்கிக் கிடக்கின்றன என்று கூறப்படுகிறது.

இந்த நிலைகளால், தென் திருவாங்கூர் நெசவாளர்கள்—குறிப்பாக கோட்டாறு வடசேரி, தெங்கம்புதூர் பகுதிகளில் வசிப்போர் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்கின்றனராம்.

இது மட்டுமின்றி, கைத்தறித் துணிகளுக்கு சர்க்கார் வழங்கும் மானியத் தொகையான 'ரிபேட்' இன்னும் ஆயிரக் கணக்கில் கூட்டுறவு சங்கங்களுக்குத் தரப்படாதிருக்கிறதாம்.

இந்த நிலை, நெசவாளர்களை வாட்டி வதைக்கிறதாம்.

'டையிங் தொழிற்சாலை'கள் பல மூடப்பட்டுள்ளனவாம்!

நெசவாளர் எண்ணற்றோர் படிப்படியாக வேலை இழந்து அபாயக் கட்டத்தை நெருங்கி வருகின்றனராம்!

சீனா ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது?

"சீனா ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் இறங்காது என்று நான் ஒருகாலத்தில் நினைத்ததுண்டு; ஆனால், இப்போதிருக்கிற நிலைமைகளைப் பார்த்தால் எனக்கு அந்த நம்பிக்கை அற்றுவிட்டது.

"பர்மிய எல்லைகளுக்குள் சீனத் துருப்புகள் இருப்பதானது, சீனாவும்—பர்மாவும் பாண்டுங் மாநாட்டில் ஒப்புக்கொண்டுள்ள பஞ்சசீலக் கொள்கைகளுக்கு நேர்முரணானது."

இவ்வாறு, தாய்லாந்து நாட்டுப் பிரதமர் கூறியிருக்கிறார்.

சீனா தற்போது வசப்படுத்திக் கொண்டுள்ள பிரதேசம், இந்தியாவிற்குள் சீனக் கம்யூனிஸ்டுகள் நுழையக்கூடிய விதத்தில் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் கூறினார்.

க. அன்பழகன் சுற்றுப் பயணம்

செப். 7: மாலை வங்கனூர் 4 மணி: ஆரம்பப் பள்ளி விழா; 6 மணி: கழக ஆண்டு விழா;
இரவு: சித்தூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம்;
8: மாலை: சங்ககிரி(சேலம்) தி. மு. கழகப் பொதுக் கூட்டம்;
9: காலை: காட்டுப்பாடி திருமணம்;
மாலை 6 மணி: வேலூர் (வ. ஆ) தோட்டப்பாளையம் கழக ஆண்டு விழா.

600 கல்லூரி மாணவர்கள் அனுதாப வேலை நிறுத்தம்

மைசூர், செப். 5—
சென்ற திங்கள் 20-ந் தேதி தொட்டு வேலை நிறுத்தம் செய்து வரும் ஆயுர்வேத யுனானி மருத்துவக் கலலூரி மாணவர்களுக்குத் தங்கள் அனுதாபத்தையும் ஆதரவையும் தெரிவிக்கும் வகையில் இங்குள்ள கல்லூரி மாணவர்கள் சுமார் 600 பேர் தங்களது வகுப்புகளுக்குச் செல்லவில்லையாம்.

வகுப்புகளுக்குச் செல்லாமலிருந்த அம்மாணவர்கள் ஊர்வலம் நடத்திப் பின்னர் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் மாணவர்களின் குறைகளை உடனடியாக நிவர்த்திக்கக் கோரி தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றியிருக்கின்றனராம்.

****

திராவிட நாடு விடுதலை (பிரிவினை) வாரம் கொண்டாடுவீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க நாளான **17—9—56**-ஆம் நாளிலிருந்து **23—9—56**-ஆம் நாள்வரை

திராவிடநாடு விடுதலை (பிரிவினை) வாரமாகக்

கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும், கழகச் சார்புள்ள அமைப்புக்களையும் அன்போடு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்திக் கருத்து விளக்கம் செய்யுமாறு மகிழ்ச்சியோடு கேட்டுக் கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
1—9—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

வரவேற்பு-தேநீர் விருந்து

8-9-56 மாலை 6 மணிக்கு திண்டுக்கல்லை அடுத்த கும்மம்பட்டியில் கலைமன்றச் சார்பில் மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்களுக்கு வரவேற்பும், தேநீர் விருந்தும் நடைபெறும். தோழர்கள் பி. சமதர்மம், வீ. ஆர். மூர்த்தி. கு பழனிச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கோவை மாவட்ட தி. மு. கழக எழுத்தாளர்கட்கு:

"தி. மு. கழக எழுத்தாளர் கிளையை செப்டம்பர் இறுதி வாரத்தில் துவக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்திலுள்ள எழுத்தாளர்கள் அனைவரும் என் முகவரிக்குத் தொடர்பு கொள்ள விழைகிறேன்."

என்று, குனியமுத்தூர் தோழர் தங்கமாணிக்கம் அறிவிக்கிறார்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

புதுடில்லி, செப். 5—
குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவது சம்பந்தமாக உயர்தர அதிகாரபோர்டு ஒன்றை மத்திய சுகாதார இலாகா நிறுவியிருக்கிறதாம்.

சென்னை 31-வது வட்டம் அழகிரி மன்றம்

8-9-56 காலை 10 மணியளவில், மேற்படி மன்றப் பணிமனையில் தோழர் ப. கருமுகில் தலைமையில், மன்ற நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும்.

மாணவ ஆசிரியர் தமிழ் மன்றத துவக்க விழா

8-9-56 மாலை 5-30 மணிக்கு பரமக்குடி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி மாணவ ஆசிரியர் தமிழ் மன்றத் துவக்க விழா திரு டி சீனிவாசன் தலைமையில் நடைபெறும்; திரு. மா. இராசமாணிக்கம் தகைக்க உரையாற்றுவார்; திரு. எஸ். வ. சந்தியாகுமணி பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம், ஏ.